
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1048

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---


# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

140

திமுகழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த குளித்தலை முத்துகிருஷ்ணன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# குளித்தலை முத்துகிருஷ்ணன்: ‘நிழலாக நின்று உழைத்தவர்!’



1956-ஆம் ஆண்டு, அன்றைய ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டம், குளித்தலைக்கு அருகில் உள்ள கிராமமான நங்கவரம், பண்ணை ஆதிக்கத்துக்கு எதிராக அதுவரை சந்திக்காத ஒரு போராட்டத்தைக் கண்டது. அன்றைய மாவட்டச் செயலாளர் அன்பிலாரை அழைத்த பேரறிஞர் அண்ணா, பேச்சு வார்த்தைக்கு கலைஞர் அழைத்துச் செல்ல ஆணையிட்டார். கலைஞர் களத்திற்கு வந்தார். ‘தானே ஏரைப் பூட்டி ஓட்டியதோடு, ‘உழுபவனுக்கு நிலம் சொந்தம்’, ‘நாடு பாதி நங்கவரம் பாதி’ என்ற முழக்கங்களுடன், தொடர்ந்து ஆறு நாள்கள் முற்றுகைப் போராட்டம் நடத்தியதில், மூன்று ஆண்டுக் கால போராட்டம் முடிவுக்கு வந்தது. கலைஞர், அப்பகுதி உழைக்கும் மக்களின் மனத்தில் நீங்காத இடம்பிடித்தார். மக்களிடம் அவர் பெற்ற நம்பிக்கையே, அவரது சட்டமன்றப் பணிகளுக்கு நாற்றங்காலாகவும் அமைந்தது.

பண்ணை ஆதிக்கத்துக்கு எதிரான அந்த வீரம் செறிந்த போராட்டக் களத்தில், குளித்தலையில் கலைஞரின் கரத்தை வலுப்படுத்தியவர்களில் குறிப்பிடத்தக்கவர் முத்துகிருஷ்ணன். ‘நங்கவரம் விவசாயிகளின் பிரச்சினையை கலைஞருக்கு கவனப்படுத்தி, அவர் மூலம் போராட்டம் செய்து விவசாயிகளின் துயர் துடைத்தவர்’ என்கிற பெயர் பெற்றவர். போராட்டக் களத்தில், கலைஞரின் வியூகங்களுக்குத் துணையாக நின்ற நெருக்கமான உடன்பிறப்பு. ‘இயக்கத்தின் வளர்ச்சிக்காக, ஏதாவது தக்கது செய்ய வேண்டும் என எப்போதும், எந்நேரமும் சிந்தித்திடும் எண்ணம் கொண்டவர் முத்துகிருஷ்ணன், ‘குளித்தலை தொகுதியில் நான் வேட்பாளராக நின்றபோது, நிழல்போல நீங்காதிருந்து எனக்கு வாக்கு சேகரிக்க உதவியவர்’ என ‘நெஞ்சுக்கு நீதி’யில் பெருமையுடன் குறிப்பிடுகிறார் கலைஞர்.

### தடியடியும் போராட்டமும்

திராவிடர் கழகத்தின் தீவிர பணியாளராக, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோருடன் நெருங்கிப் பழகியவர். கழகத்தின் தொடக்கக் காலத்திலேயே தன்னை இணைத்துக்கொண்ட முன்னோடி.

1951-ஆம் ஆண்டு தொடக்கத்தில், ஒன்றிய அமைச்சர் மேத்தா, தமிழ்நாடு வருகையின்போது கருப்புக்கொடி காட்டும் அறப்போரை அறிவித்தது கழகம். அதுபோலவே, தமிழகமெங்கும் கருப்புக்கொடிகளைக் கண்டு அவர் திகைத்தார். சென்னை, கோவை, திருச்சி, மதுரை முதலிய நகரங்களில் ஆயிரக்கணக்கான கருப்புக்கொடிகள் திராவிடத்தின் எதிர்ப்பை எடுத்துக் காட்டின. அப்போது காவல் துறையின் அடக்குமுறை, தடியடித் தாக்குதலுக்கு ஆளானவர்களில் குளித்தலையில் இருந்து முத்துகிருஷ்ணன் பெயரை வரலாறு பதிவுசெய்துள்ளது. ‘ஒடிந்த கால்கள்! நொறுங்கிய எலும்புகள்! சிந்திய ரத்தம்! கொஞ்சமல்ல’ என கழக முன்னோடி சிட்டிபாபு பதிவுசெய்துள்ள ‘தி.மு.க. வரலாறு’ நூலில் முத்துகிருஷ்ணனைப் பதிவுசெய்துள்ளார்.

### தேர்தல் சிறப்பு மாநாடு

1956-ஆம் ஆண்டு மே மாதம், திருச்சி வள்ளுவர் நகரில் நடைபெற்ற கழகத்தின் 2-வது மாநில மாநாட்டில் சிறப்புத் தீர்மானங்கள் படிப்பவர்கள், மாநாட்டில் பேசுவோர் பட்டியல் மாநாட்டுக்கு முன் வெளியானது. ‘பொதுத் தேர்தல் பங்கேற்பு குறித்த உரையாற்றிய’ 130 பேரில், குளித்தலை முத்துகிருஷ்ணனும் ஒருவர்.

மாநாட்டில், 6-வது தீர்மானமாக ‘காஷ்மீர் பிரச்சினையில் முடிவு காண்க’ என ஒன்றிய அரசை வலியுறுத்தும் தீர்மானத்தை எஸ்.எஸ்.தென்னரசு அவர்கள் வாசிக்க, அதை வழிமொழிந்தவர் குளித்தலை முத்துகிருஷ்ணன் எனப் பதிவுசெய்துள்ளது திராவிட நாடு.

அதற்கு அடுத்த ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், கழகம் 15 இடங்களை வென்றதுடன், குளித்தலை சட்டமன்ற உறுப்பினராக தேர்வானார் கலைஞர். அந்த ஆண்டு ஏப்ரல் 14-ஆம் தேதி, கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் குளித்தலையில்தான் நடைபெற்றது. கூட்டத்தில், கழகத்தின் சார்பில் மக்களுக்கும், ஆதரவைத் திரட்டுவதற்கு உறுதுணையாக இருந்த கழகத் தோழர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டன. அதே நேரத்தில், மாவட்ட ஆட்சி மன்றம், நகராட்சி மன்றம், ஊராட்சி மன்றம், ஆகியவற்றிற்கான தேர்தல்களில் ஈடுபடுவதற்கான வழிவகை குறித்து ஆவன செய்யுமாறு பொதுச் செயலாளரையும் அந்தப் பொதுக்குழு கேட்டுக்கொண்டது. அந்தப் பொதுக்குழுவை மாவட்டக் கழகத்துடன் முன்னின்று நடத்தியவர்களில் ஒருவர் முத்துகிருஷ்ணன்.

> “கழகத்தினரை அரவணைத்துச் செல்வதிலும், இளைஞர்களை வழிநடத்துவதிலும் கொண்டிருந்த ஈடுபாடுதான், அவரை குளித்தலைக் கழகத்தின் முகமாக அடையாளம் கொள்ள வைத்தது.”

### அண்ணா அளித்த சான்று

1961-ஆம் ஆண்டு, மே மாதம் ‘திராவிட நாடு’ இதழில், கழகக் கூட்டங்களுக்காகத் தான் சென்று வந்த ஊர்களையும், தன்னோடு பேசியவர்களையும், தனது நினைவிலிருந்து பட்டியலிட்டு, ‘இந்தியர் ஆகின்றனர்’ என தம்பிக்கு எழுதிய கட்டுரையில் குளித்தலை முத்துகிருஷ்ணனைக் குறிப்பிடுகிறார் பேரறிஞர் அண்ணா.

“கொள்கை அறிந்தவர்கள், விளக்கும் ஆற்றல் பெற்றவர்கள், வரலாறுதனைப் படித்து வகையான அறிவு கொண்டவர்கள், ஆராய்ந்து பார்த்ததனால் அரும் உண்மை கண்டவர்கள், இந்நாடு முன்னம் இருந்த நிலைதனை இலக்கியம் காட்டிட, கண்டு களிப்புற்றவர்கள், அவரெல்லாம் செல்கின்றார், அறிவுடன் ஆர்வம் காட்டி, கொள்கை பரப்புதற்கு! அணி என்ன, அழகென்ன, ஆதார வகையென்ன, நடையின் மிடுக்கென்ன என்றெல்லாம் பேசி, நாட்டினர் பாராட்டுகின்றார்” என பேரறிஞர் அண்ணா பாராட்டிய கழக சொற்பொழிவாளராகத் திகழ்ந்திருக்கிறார் முத்துகிருஷ்ணன்.

கழகத்தின் அனைத்து போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர். விலைவாசி உயர்வுப் போராட்டம், மொழிப்போர் ஆகியவற்றில் சிறைவாசம் அனுபவித்தவர். 1976 ஆண்டு மிசா நெருக்கடி காலத்தில் திருச்சி மாவட்டத்தில் இருந்து கைது செய்யப்பட்டவர்களில், ஓராண்டு காலம் சிறைக் கொடுமைகளை ஏற்றவர்.

1961-ஆம் ஆண்டில், முத்துகிருஷ்ணன் மாவட்டத் துணைச் செயலாளராக இருந்தபோது, குளித்தலை வட்டத்தில், மயிலாடி என்கிற ஊரில் கழகக் கிளையின் உறுப்பினர் மாரியப்பன் என்பவர் அரசியல் எதிரிகளால் படுகொலை செய்யப்பட்டார். அப்போது, இளமுருகு பொற்செல்வி உள்ளிட்ட தோழர்களோடு கழகத்தினர் 2000-க்கு மேற்பட்டவர்களை நள்ளிரவு நேரத்திலும் திரட்டி, நீதி கேட்கும் போராட்டத்தை நடத்தி இருக்கிறார்.

### சட்டமன்ற வெள்ளிவிழா கூட்டம்

1982-ஆம் ஆண்டு, மே மாதம் 15 மற்றும் 16 தேதிகளில் தஞ்சை மாவட்டக் கழகத்தின் ஆறாவது மாநாடு நடைபெற்றது. அதற்கு அடுத்த நாள், அறிவிக்கப்படாத வகையில் திருச்சி மாவட்டக் கழகத்தின் சார்பில் குளித்தலையில் ஒரு மாநாடு நடைபெற்றது. கலைஞர் சட்டமன்ற உறுப்பினராகி 25 ஆண்டுகள் ஆனதைக் கொண்டாடும், ‘சட்டமன்றப் பணி வெள்ளிவிழா’ மாநாட்டினை ஏற்பாடு செய்தார் மாவட்டச் செயலாளர் அன்பிலார். மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக கலைஞரை வரவேற்றவர் குளித்தலை முத்துகிருஷ்ணன்.

சட்டமேலவை உறுப்பினராகவும் பணியாற்றிய முத்துகிருஷ்ணன், கழகத்தினரை அரவணைத்துச் செல்வதிலும், இளைஞர்களை வழிநடத்துவதிலும் கொண்டிருந்த ஈடுபாடுதான், அவரை குளித்தலைக் கழகத்தின் முகமாக அடையாளம் கொள்ள வைத்தது.

1989-ஆம் ஆண்டு இறுதியில், கழகத்தின் திருப்புமுனை மாநாட்டுக்கு, கலைஞர் அறைகூவல் விடுத்துக்கொண்டிருந்த நேரத்தில், எதிர்பாராத வகையில் தனது இயக்கத்தை நிறுத்திக்கொண்டார் முத்துகிருஷ்ணன். மாவட்டக் கழகத்தினர் திரண்டது மட்டுமல்ல; மாநாட்டில் அவர் நினைவுகளுக்கு மரியாதையும் செய்தது கழகம். என்றும் அவர் நினைவுகளை வரலாறாகச் சுமந்துகொண்டிருக்கும் கழகத்தின் இளந்தலைமுறை.

...துடிக்கும்

---

## கணக்கு வழக்கைப் போல இது வழக்குக் கணக்கு!

திருப்பரங்குன்றம் வழக்கில், சர்ச்சைக்குரிய தீர்ப்பை வழங்கி கடும் விமர்சனத்துக்குள்ளாகி இருக்கும் ஜி.ஆர்.சுவாமிநாதனைக் காக்க களம் கண்டிருக்கும் இந்துத்துவ பரிவாரங்கள், 2017 முதல் 2025 வரை 9 வருடங்களில் 1,20,426 வழக்குகளை ஜி.ஆர்.சுவாமிநாதன் விசாரித்து தீர்ப்பு வழங்கி இருப்பதாகவும், அதனைப் பொறுத்துக்கொள்ள முடியாமல்தான் விமர்சிக்கிறார்கள் என்றும் ஒரு பதிவைச் சுற்ற விட்டிருக்கிறார்கள்.

இதுகுறித்து பதிவிட்டுள்ள சி.பி.எம். கட்சியைச் சேர்ந்த கனகராஜ், “எந்த விதமான வார விடுமுறை, பண்டிகை விடுமுறை, மருத்துவ விடுப்பு, தேசிய விடுமுறை என எந்த விடுப்பும் எடுக்காமல் எல்லா நாட்களும் அதாவது, வருடத்தில் 365 நாட்களும் பணி செய்ததாகக் கொண்டால்கூட ஒரு நாளைக்கு 8 மணி நேரம் அதாவது, காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை (அதுவும் சாப்பாடு டீ அல்லது வேறு எந்த ஓய்வுக்கும் செல்லாமல்) பணி செய்து இருந்தால், ஒரு நாளைக்கு எத்தனை வழக்குகளில் சராசரியாகத் தீர்ப்பு சொல்லியிருக்க முடியும் என்று கணக்கு போடலாமா?

இந்த வருடம் முடிய இன்னும் ஒரு 20 நாட்கள் இருக்கின்றன.

அந்த நாளையும் சேர்த்து நாம் கணக்கிடலாம்.

மொத்த வழக்குகள் -1,20,426

மொத்த வருடங்கள் -9

ஆண்டுக்கு சராசரி வழக்குகள்-13,380.6

ஒரு நாளைக்கு சராசரி வழக்கு-36.66

ஒரு மணி நேரத்திற்கு சராசரி வழக்கு -4.58

அதாவது, ஒரு வழக்கிற்கு ஆன சராசரி நேரம்-13.1 நிமிடங்கள்.

அதாவது, ஒவ்வொரு வழக்கையும் ஏற்று விசாரித்து குறுக்கு விசாரணை செய்து அதன் பிறகு அதை பரிசீலித்து தீர்ப்பு எழுதுவதற்கு 13 நிமிடங்கள், ஒரு நொடிதான் சராசரியாக எடுத்திருக்கிறார். உண்மையில் மந்திரவாதிகளால் மட்டுமே சாத்தியமானதை, நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்கள் நிகழ்த்திக் காட்டி இருக்கிறார்.

நம்முடைய பாராட்டுகளை அவருக்கு உரித்தாக்குவோம்” எனப் பதிவிட்டுள்ளார்.

---

## ஃப்ளாஷ்பேக்



### 40 ஆண்டுகளுக்கு முன், தலைவர் மேடையில்...



அ.புகழேந்தி

1984-ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில், நாகையில் நகர்மன்றத் தலைவராகப் போட்டியிட்ட ஈஸ்வரி அவர்களை, வேட்பாளராக அறிவிக்கும் பொதுக்கூட்டம் முத்தமிழறிஞர், தானைத் தலைவர் கலைஞர் தலைமையில் நடைபெற்றது. கழக முன்னோடி அண்ணன் கோ.சி.மணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராசமாணிக்கம், வழக்கறிஞர் தியாகராசன் ஆகியோருடன், அன்று இளைஞர் அணியில் தீவிரமாகப் பணியாற்றிய நானும் மேடையில் இடம்பெறும் வாய்ப்பு அமைந்தது. இன்றும் அதே உணர்வுடன் களத்தில் கழகப் பணியாற்றி வருகிறேன்.

**-அ.புகழேந்தி, 28-வது வட்ட தி.மு.க., நாகை நகரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

## கருவூலம்

### மதுரையில் பொன்னாரம்!

1982-ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 17-ஆம் தேதி, மதுரையில் கலைஞரின் 25 ஆண்டு கால சட்டமன்றப் பணியைப் பாராட்டி, முன்னாள் அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் அவர்கள் ஏற்பாட்டில், பிரமாண்ட விழா நடைபெற்றது. மதுரை மக்கள் சார்பில், கலைஞருக்கு அறுபது பவுன் பொன்னாரம் அணிவிக்கப்பட்டது. அந்த அணிகலன் கழகத்திற்கே சொந்தம் என மேடையிலேயே அறிவித்தார் கலைஞர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131